# கதை கண்ணீர் கவிதை




## நாவண்ணன்

மலையக மக்களின் கதை — அவர்
மழையெனப் பொழிந்த கண்ணீர் — என்
கலையகத் தெழுந்த கவிதை

# கதை கண்ணீர் கவிதை

நாவண்ணன்

ஸ்ரீனா வெளியீடு 2

● KATHAI - KANNEER - KAVITHAI

(History of the Up - Country Tamils in Poems
By Navannan)

- First Edition — October 1992
- Published by — Stina Veliyeedu
- Printed at — Stina Achchakam
  215, 2 nd Cross St.
  Jaffna.
- Cover Design — Gnanarathan (Sachi)

விலை ரூபா
Prise Rs. } 40/-

தொடர்பு

நாவண்ணன்
"ஸ்ரீனா வெளியீடு"
ஸ்ரீனா அச்சகம்
215, 2ம் குறுக்கு வீதி
யாழ்ப்பாணம்.

# அணிந்துரை

எந்த ஒரு விடயத்தையும் சுருக்கமாகவும், இறுக்கமாக வும், நயம் படவும் கூறுவதற்கு "கவிதை" நல்லதொரு ஊடகமாகும். எனவேதான்—

கவிஞர் நாவண்ணன் அவர்களும், மலையக மக்களின் அவலத்தையும், அலங்கோலத்தையும், ஆழமாகவும் அழகாக கவும் சொல்வதற்கு, 'கவிதை' இலக்கியத்தைக் கைக் கொண்டுள்ளார் என்று எண்ணுகின்றோம். உணர்ச்சியைத் தூண்டுவதற்கு, உற்றதொரு சாதனந்தானே! ஆமாம்—

"கதை - கண்ணீர் - கவிதை," என்ற கவிதை நயம் படைத்த ஒரு தலைப்பையும் கொடுத்துள்ளார். ஆமாம் மலையக மக்களின் கண்ணீர்க்கதை கவிதை வடிவத்தில் நன் றாக விபரிக்கப்படுகின்றது.

"மலையக மக்களின் கதை - அவர்
மழையெனப் பொழிந்த கண்ணீர் - என்
கலையகத் தெழுந்த கவிதை
கதை, கண்ணீர், கவிதை" - என்று

கலையழகுடன், கவிதையாகத் தன் காவியத்தை நம்முன் சமர்ப்பிப்பது நயக்கத்தக்கது. ஆமாம் -

தொடக்கத்திலேயே,
"புற்றரையில் புழுதியிலே
நெளிந்து வாழும்
புழுவாகி உழல்கின்ற
புன்மை காண்போம்-

என்று வாசகர்களுக்கு அழைப்புவிடுகிறார் முன்னுரை யாக. எனில்-

நம்மவர்கள் என்ன செய்தார்கள்?
வந்தர்களை வாழவைத்தார்கள்!
மற்றவர்களுக்குத் தொண்டு செய்தார்கள்!!

இதுதானே அவர்களின் சரித்திரம். இது கடந்தகால வரலாற்று உண்மையல்ல, கவிஞர் கூறுவதுபோல்-

''மற்றவர்க்கே என்றென்றும்
தொண்டு செய்து
மடியேந்தும் மதிப்பிவர்க்கு
இன்றும் உண்டு''

தமிழ்ச்சாதியினுடைய தனித்துவத்தை எடுத்துக் கூறிய கவிஞர், மலையகத்தார் யார் என்று விளக்கி, பின் அவர்களின் வரவு, அவர்களின் வாழ்வு பற்றி விபரிக்கிறார். பின்—

''கங்காணி, ஐயோ தமிழச்சியே!, கல்வி, நாடற்றோர்' விழிப்பு , தியாகிகள், தொழிற்சங்கங்கள், இணக்கலவரம், வடக்கு கிழக்கு, அபயம் கொடுத்தோர், பிரியாவிடை, பத்தினித் தமிழர், பாதுகையல்ல,'' என்னும் தலைப்புகளின் கீழ் நடந்து முடிந்த கதையை நமக்காகக் கூறிவிட்டு-

எதிர்காலம் பற்றி ''கவிதையிற்'' கனவு காண்கிறார். ஆமாம்.

தமிழர்களுக்கு மிகத் தேவையான ஒரு தந்துவத்தை. எல்லாரும் புரிந்து கொள்ளும் விதத்தில் விளக்குகிறார், அது வேறு ஒன்றுமல்ல ......எல்லாரும் பேசுவது. ஆனால், கைக்கொள்ளாதிருப்பது, எல்லார் மனங்களிலுப் நடனமிடுவது, ஆனால் நம் மத்தியில் முயற்கொப்பாயுள்ளது அதுதான்

''ஐக்கியம்''

எல்லாரும் சிந்திக்க வேண்டிய ஏற்றம் மிக முடிவு என்று எண்ணுகிறோம்.

சிந்தனைக்குச் சில சிதறல்களை அழகுறச் சிந்துகிறார். கவிஞர்.

கவிதைகள் அநேகமாக எதுகை மோனையுடன் கூடிய, ஓசை நயம்படைத்த சந்தக்கவிதைகளாக வந்து விழுந்திருப்பது வியந்து போற்றுதற் குரியது ………………

சில வேளை நந்தவனத்தில் மந்த மாருதத்தின் இதம் ……… .. மறு வேளை, கொடுமைச் சாக்காட்டில் சண்ட மாருதத்தின் வதம்……… .. ஆமாம் மாறிமாறி, தென்றலாகவும், கொண்டலாகவும் இதமாய் வீசுவதையும், வதமாய் ஒலிப்பதையும் உணரக்கூடியதாய் உள்ளன.

சற்றே கேளுங்கள்

*"மூக்கிலே மின்னும் மின்னி*
*முறுவல்கள் மின்னும் வாய்கள்*
*பாக்கு வெற் றிலைகள் போட்டு*
*பழுப்புடன் தோன்றும் பற்கள்*
*சாக்கினை இடையிற் சுற்றி*
*சாரலில் கூடை தன்னை*
*தூக்கியே பெண்கள் செல்ல*
*தூங்குமோ கவிஞர் நெஞ்சம்"* - என்று

பழங்கால நாட்டார் பாடல்களின், மிதமான பண்புதனை ஞாபகப்படுத்தி, இதமான தென்றலென வீசச் செய்த கவிஞர்தான்-

*" ஆண்டிகள் அல்லர் அபலைகள் அல்லர்*
*அன்னை தமிழின் அருந்தவப் புதல்வர்*
*வேண்டிய கருமம் வென்றிட வேண்டில்*
*வெல்ல மென்று விரும்பிடோம் உயிரை*
*மாண்டிடத் துணிந்து மண்ணில் வீழ்வம்*
*மானம் காத்து மடிவதில் பெருமை*

*தோண்டி இவ்வுடலும் துச்சம் எமக்கு*
*துன்பம் தாங்கிடல் இன்பம் எமக்கு*
*காண்டிடும் எங்கள் கரத்தின் வலிமை*
*களத்தில் பாய்ந்து களைவம் கவலை ........*

என்று அறைகூவிப் புரட்சிக் கொடி ஏந்துகின்றார் கவிஞர்.

மேலும்-

கருத்து வெளிப்பாட்டுக்கேற்ப, பாவினங்களும் உவமை உவமான அணி நலன்களும், சொல் வளமும் பொருள் வளமும் பொதிந்து கிடப்பதைக் காணக் கூடியதாயுள்ளது.

வரலாற்றுக் காவியமாய் இருந்தாலும், வளமான கவிதைகள் காணப்படுவதால், எடுத்த எடுப்பிலேயே வாசித்து முடித்து விடவேண்டும் என்ற ஒரு துடிப்பை ஏற்படுத்து கின்றது என்று சொன்னால் தவறில்லை என்றே எண்ணு கின்றேன். ஆமாம்-

*கவிஞர் இறுதிக் கண்ணியில் கூறுவது*
*''மலையகம் வாழ்க, வாழ்க,*
*மக்களும் வாழ்க, வாழ்க,*
*நிலைபெயராத வாழ்வில்*
*நிறைவொடு வாழ்க, வாழ்க.''*

எனவே நாமும் இறுதியாக, கவிஞரை நோக்கி இவ் வாறு கூற விரும்புகின்றோம்.

*வளரும், நலமும், பலமும் பெற்று*
*வளர்க உமது கவித்துவம் -*
*உலகில் உலவும் மக்கள் வாழ்வு*
*உயர தருவீர் ஆம் தத்துவம்.*

721 / 5, திருகோணமலை வீதி, ஏ. பி. வி. கோமஸ்
மாத்தளை. B. A. Dip - in - Epu.
*1989* மே.

# கவிதை பிறந்த கதை

1978 ம் ஆண்டு நடுப்பகுதியில் ஒருநாள். அன்று காலை தலைமன்னார் இறங்குதுறையில் இருந்து இராமானுஜம் கப்பல் பயணிகளை ஏற்றிக் கொண்டு இராமேஸ்வரம் நோக்கி தனது பயணத்தை ஆரம்பிக்க இருக்கின்றது.

இறங்குதுறை மேடையிலும் கப்பலுக்குள்ளும் அந்தக் கடலலைகள்போன்று உள்ளங்கள் குமுறிக் கொண்டு இருக்கின்றன. ஆண்டாண்டு காலமாக தாம் வாழ்ந்த இந்த மண்ணை விட்டு அறியாத நாடான தமிழகத்துக்கு சிறீமாவோ - சாஸ்திரி ஒப்பந்த அடிப்படையில் நாடுகடத்தப்படும் மலையக மக்களின் உள்ளங்கள் தானவை. ஒரே குடும்பத்தில் பாதிப் பேர் இந்த மண்மீதும், பாதிப்பேர் புறப்படவிருக்கும் கப்பலின் மேற்றளத்திலும் நின்று கண்ணீர் வடித்துக் கொண்டுநின்றனர்.

நங்கூரங்கள் மேலே தூக்கப்படுகின்றன, பயணம் தொடங்குகின்றது என்பதற்கு அடையாளமாக கப்பலில் சங்கொலிக்கின்றது. அந்த சங்கொலியையும் விஞ்சியதாக "ஓ......" என்ற அவல ஓசை இறங்குதுறை தளத்தில் இருந்தும் கப்பலில் இருந்தும் ஏககாலத்தில் எழுகின்றது. கப்பல் மெல்ல மெல்ல துறையை விட்டு அகலுகின்றது. கப்பலில் உள்ளவர்கள் கரையை நோக்கியும் கரையில் உள்ளவர்கள் கப்பலை நோக்கியும் கைகளைநீட்டி உறவு முறைகளை கூவி அழைத்துக் கொண்டு "எந்த ஜென்மத்தில் இனிச்சந்திப்போம்" என்று அழுத காட்சி, ஆற்றாமை மேலிடவே கப்பலின் இரும்புச் சுவரிலே தலையை மோதிக் கொண்டு அவர்கள் துடித்து நின்றகாட்சி அன்றைய கப்பல் பிரயாணிகளில் ஒருவனாக நின்று கொண்டிருந்த என் நெஞ்சத்தை நெகிழச் செய்தது, கண்ணீரை கசிந்தொழுக வைத்தது

அந்தக் கணத்திலேயே எந்தனுக்குள்ளே ஒரு தாகம். இந்தப் பரிதாபத்துக்குரிய மக்களைப்பற்றி நான் ஏதாவது எழுதியே ஆகவேண்டும் என்ற எண்ணம் என்னை ஆட்கொண்டது. தமிழகத்தில் ஓராண்டு கல்வியை முடித்துக் கொண்டு ஈழம் வந்த எனக்கு 'புதிய உலகம்' சஞ்சிகையின் துணையாசிரியனாக தொடர்ந்தும் பணியாற்ற சந்தர்ப்பம் கொடுக்கப் பட்டது. 'புதிய உலகம்' 1981 பங்குனி - சித்திரை இதழை "குறிஞ்சிச் சிறப்பு மலராக" வெளியிடுவதென்று ஆசிரியபீடம் தீர்மானித்த பொழுது அதற்கு வேண்டிய தகவல்களைத் திரட்டுவதற்காக நானே மலையகம் செல்ல வேண்டிய வாய்ப்புக்கிட்டியது. அதற்காக பதுளை பண்டாரவளை பகுதிகளில் எனக்கு வேண்டியவற்றை நான் திரட்டிய பொழுது ஏற்கனவே கப்பலில் எனக்குள் எழுந்த மனப்பசிக்கு தீனிகிடைத்தது போல ஆயிற்று. மீண்டும் 1983 ம் ஆண்டு முற்பகுதியில் ஆறு மாதங்கள் தலவாக்கெலையில் அந்த மக்களோடு நானும் ஒருவனாக வாழ்ந்து அவர்களது லயங்களில் உண்டு உறங்கி பகிர்ந்து கொண்ட அனுபவங்கள், அறிந்து கொண்ட விடயங்கள், பெற்றுக் கொண்ட உணர்வுகளின் வெளிப்பாடுதான் என்னுடைய இந்தக் "கதை கண்ணீர் கவிதை"

1986 ம் ஆண்டில் ஈழமுரசில் தொடராக வெளிவருவதற்கு இதனை ஒப்படைத்தேன். நான்கு இதழ்களில் தொடர்ச்சியாக வந்த எனது "கதை கண்ணீர் கவிதை" திடீரென்று நிறுத்தப்பட்டது. சிலவாரங்கள் கழித்து அன்றைய ஆசிரியரிடம் தொடர்பு கொண்டு இது பற்றி விசாரித்த போது "உங்களது கையெழுத்துப் பிரதிகள் எங்கோ தொலைந்து விட்டன" என்ற பொறுப்பற்ற பதிலைக் கேட்டு நான் அடைந்த வேதனை கொஞ்சமல்ல.

மீண்டும் அதன் பிரதிகளை எங்கே தேடுவதென்று தெரியாத நிலையில் நான் நின்றபொழுது எனது நண்பன் இளையவன் தன்னிடம் இருந்த இந்தக் காவியத்தின்

பிரதியொன்றை தந்துஉதவினார். இந்த மலையக மக்கள் பற்றிய இக்கவிதைகளில் அவருக்குள்ள ஆவலால் இதன் பிரதிகளை ஏற்கனவே அவர் என்னிடம் இருந்து பெற்றிருந்தார்.

ஈழமுரசினை புதிய நிர்வாகம் 1987ல் பொறுப்பெடுத்த பொழுது அதன் ஆசிரியர் குழுவில் ஒருவராக பணியாற்றிய எனது மதிப்புக்குரிய நண்பன் இராதேயன் அந்தப் பிரதிகளை என்னிடம் வலிந்து கேட்டு 5.4.1987 முதல் ஈழ முரசு வார இதழில் இத்தொடரை வெளிவரச் செய்தார். தொடர்ச்சியாக 20 வாரங்கள் ஈழமுரசு வாரஇதழ்களில் வெளிவந்தன.

1989ம் ஆண்டு இதனை ஒருநூலாக வெளியிடும் முயற்சியில்இறங்கினேன். பாதிவேலை முடிவுற்ற வேளையில் பாரதப் படையின் ஆக்ரகிமிப்பினால் என்னுடைய வெளியீட்டு முயற்சி தடைப்பட்டது. தொடர்ந்தும் சிறீலங்கா அரசின் பொருளாதாரத் தடையினால் அச்சிடும் காகிதத்துக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு எனது முயற்சியை பின்தள்ளிக் கொண்டே வந்தது. இறுதியில் மாறன் பதிப்பகத்தாரின் ஆதரவுடன் இப்பொழுது நான் இந்த நூலை வெளியிட முன் வந்தபொழுது முன்னர் போன்ற சிக்கல் மீண்டும் எழுந்தது. அது, இந்தியப்படைகளின் ஆக்கிரமிப்புக் காலத்தில் ஏற்பட்ட அவலங்கள், இடப்பெயர்வுகள் காரணத்தால் முன்னர் அச்சுவேலைகள் நடைபெற்ற மணியோசை அச்சகத்தில் இருந்து ''கதை கண்ணீர் கவிதை''யின் முழுப் பிரதியுமே தொலைந்து போயிருந்தது, பழைய ஈழமுரசின் கோப்புகளைத் தேடித்தான் இவற்றை முழுமையாகப் பெற முடியும் என்று நான் முயற்சித்துக் கொண்டு இருந்த வேளையில். என் அன்புக்குரிய தம்பி இயக்கச்சி கருணாகரன் ஒருநாள் கதை கண்ணீர் கவிதையின் முழுப் பிரதியையும் தன்னுடைய கையெழுத்துப் பிரதியாகவே என்னிடம் ஒப்படைத்த பொழுது நான் அடைந்த வியப்புக்கு அளவில்லை. ஆம், 5.4.1987 முதல் 20 வாரங்களும்

தொடர்ச்சியாக வந்த இக்காவியத்தை வாராந்தம் பத்திரிகையைப் பார்த்து பிரதிபண்ணிவைத்த அவருடைய நல்ல செயலுக்கு நான் நன்றி தெரிவிப்பதா அல்லது அவரது இலக்கிய ஆர்வத்துக்கு பாராட்டு தெரிவிப்பதா என்று புரியாமல் நின்றேன். எது எப்படியோ என்னுடைய முயற்சி மரமாகி கனிகொடுக்கின்ற நாள் இது. இன்று உங்கள் கைகளில் இது புத்தகமாக தவழ்கின்றது.

கையெழுத்துப் பிரதிகளாக, மலையகத்தின் பிரபல எழுத்தளரும், கவிஞரும், கல்விமானுமாகிய திரு. ஏ. பி. வி. கோமஸ் அவர்களிடம் இக்கவிதைகளுக்கு அணிந்துரை எழுதி வழங்கும் படி அனுப்பிவைத்தேன். அவர் அப்பொழுதே மறுக்காமல் எழுதி அனுப்பிவைத்தார்.

இதன் முகப்போவியத்தை நாடறிந்த பிரபல நாவலாசிரியரும் மு. தளையசிங்கத்தின் ''புதுயுகம் பிறக்கிறது'' எஸ். பொ. வின் 'வீ' ஆகிய நூல்களுக்கு முகப்போவியங்களை வரைந்த என் மதிப்புக்குரிய நண்பர் திரு. ஞானரதன் (சச்சி) அவர்கள் பொருள் பொதிந்த விதத்தில் வரைந்து கொடுத்துள்ளார்.

எனவே இந்தநூல் வெளிவரக்காரணிகளாக அமைந்த திரு. இராதேயன், திரு. இயக்கச்சி கருணாகரன், மணியோசை திரு. யோசப்பாலா, மாறன் பதிப்பகம் திரு. ரவி, திரு. இளையவன், அணிந்துரை வழங்கிய திரு. ஏ. பி. வி கோமஸ், திரு. ஞானரதன் ஆகியோருக்கும், எமது வெளியீட்டக ஊழியர்கட்கும் இன்னும் பலவிதங்களில் உதவிய அனைவருக்கும் என் இதய நன்றிகளை தெரிவித்துகொள்கின்றேன்.

இது எமது வெளியீட்டகத்தின் இரண்டாவது வெளியீடாகும். இந்நூலுக்கும் இன்னும் தொடர்ச்சியாக வரவிருக்கும் எமதுவெளியீடுகளுக்கும் வாசக அன்பர்கள் பேராதரவு வழங்குவீர்கள் என்று நம்புகின்றேன்.

நன்றி

—நாவண்ணன்

ஸ்ரீனா வெளியீட்டகம்
215, 2ம் குறுக்கு வீதி
யாழ்ப்பாணம்

## "தமிழச் சாதி"

நற்றமிழே நமக்கு உயிர்
நாங்கள் தாமே
நானிலத்தே தோன்றியுள்ள
மூத்த சாதி
கற்றவர்கள் இவ்வினத்தின்
மாட்சி எல்லாம்
கல்வெட்டு ஏடுகளில்
கண்டு சொன்னார்
சொற்றிறன்கள் இப்படியே
சொல்லுமெங்கள்
சொல்லுக்கும் வாழ்வுக்கும்
தொடர்பு என்னே
புற்றரையில் புழுதியிலே
நெளிந்து வாழும்
புழுவாகி உழல்கின்ற
புன்மை காண்போம்.

இற்றரையில் இச்சாதி
இல்லா நாடு
இருக்கிறது என்று சொலின்
எவரும் நம்பார்
கற்றரையில் மட்டுமல்ல
வாய்ப்பு வந்தால்
ககனத்தில் கூட இவர்
களனி செய்வார்

மற்றவர்க்கே என்றென்றும்
தொண்டு செய்து
மடியேந்தும் மதிப்பிவர்க்கு
இன்று முண்டு
இற்றவரை இவருக்கு
இருப்பதெல்லாம்
இதிகாச இலக்கியப்
பெருமை மட்டும்.

மூவேந்தர் முடிவேந்தர்
காத்ததென்போம்
முதலிறைவன் வாய் வந்த
மொழியிதென்போம்
பாவேந்தர் பாமழையால்
வளர்ந்ததென்போம்
பழந்தமிழாள் கிழண்டாக
பாவை என்போம்
பூவேந்தர் வாழ்கின்ற
புரிகள் எல்லாம்
போய் வந்த தமிழர் என
பெருமை கொள்வோம்
''ஆ!'' இந்த தமிழரையே
ஆட்சி செய்யும்
அக்கிரமம் கேடுகளை
அறியச் சொல்வேன்.

இதிகாச காலங்கள்
தொட்டு இந்த
இலங்கையிலே வாழ்ந்தவர்கள்
தமிழர் என்றும்
அதிகாலம் முந்தியவர்
தாங்கள் என்றும்
ஆய்வுக்கு அப்பாலும்
பெருமையுண்டு
அதிகாரம் ஆனாலும்
இவர்க்கு இல்லை
அதுமாறி இன்னோர் கை
ஆளக் காண்பீர்
வதிகின்ற இந்நாட்டில்
தமிழனன்றோ
வந்த குடி எனும் புதிய
வரலாறுச்சு.

வந்தோர்கள் தமிழரெனில்
வங்க நாட்டு
வள்ளத்தோ டொதுங்கியவர்
வரலாறென்ன
வந்தோரை வரவேற்ற
பாவத்தாலே
வாழ்ந்தோர்கள் வரலாற்றில்
வழுவி விட்டார்

வந்தார்கள் பின்னர் சில
தமிழர் என்று
வரலாறும் சொல்கின்ற
உண்மையுண்டு
வந்தோர்கள் எல்லார்க்கும்
முன்னர் இங்கு
வாழ்ந்தோரும் தமிழரெனும்
சிறப்புமுண்டு.

இன்றைக்கு இவருள்ள
நிலைமை என்ன?
இலங்கையிலே இச்சாதி
இழிவு உற்று
அன்றைக்கு வாழ்ந்திட்ட
நிலைமை மாறி
அடிமைக்கு இலக்கணமாய்
ஆகிப் போனார்
என்றைக்கும் இவர்கட்கு
மீட்சியில்லை
என்பதுவே மெய் என்ற
நிலைமையாகி
குன்றாத்த புகழ் சாய்ந்து
குழியுள் வீழ்ந்து
குலங்கெட்டு நலங்கெட்டு
குன்றிப் போனார்.

# மலையகத் தமிழர்

முந்தியே இந்த நாட்டில்
வாழ்ந்தோர் பற்றி
முக்கியம் தந்திங்கு
பாடமாட்டேன்
பிந்தியே ஈழத்தில்
வாழ வந்து
பிழிந்து தம் குருதியை
இந்த மண்ணில்
சிந்தியே செழிப்பினை
தந்த பின்னும்
சிறப்பது கண்டிடா
தழுந்திச் சாகும்
இந்திய மலையக
தமிழர் பற்றி
இசைந்து யான் பாடலே
இயற்ற வந்தேன்.

பஞ்சமும் பசிப்பிணியும்
பாரதத்தில்
பற்றியே இருந்திட்ட
காலந் தன்னில்
வஞ்சகர் தம்வலையை
வளைத்துப் போட்டார்
வளநாடு இலங்கைக்கு
வாரு மென்றார்

குஞ்சரம் வாழ்ந்திடும்
இந்த நாட்டில்
கொடியுடன் வழலாம்
என்று வந்தார்
குஞ்சமும் குடையுமா
இங்கு பெற்ருர்
குமுறலும் அழுகையும்
கூடப் பெற்ருர்.

ஈழத்தே முன்வாழ்ந்த
தமிழர் போக
இறுதியில் தென்னகத்
திருந்தும் வந்தார்
ஆளத்தான் வந்திட்ட
ஆங்கிலேயன்
ஆதாயம் தேடியிங்
கழைத்து வந்தான்
வாழத்தான் வந்திட்ட
தமிழர் கூட்டம்
வரலாற்றுப் பெருமைகள்
யாவும் கெட்டு
வாழவோ மாளவோ
முடியாதின்று
வருந்திடும் வரலாறு
இந்த நாட்டில்.

வெள்ளையர் ஆட்சியில்
இலங்கை நாட்டில்
விளையுது பொன் னென்று
வியக்கச் சொன்னர்
கொள்ளையாய் கொள்வீரே
கோடி செல்வம்
குடும்பமாய் வாருங்கள்
கண்டிக் கென்ருர்
கள்ளையே உண்டவர்
கருத்திழந்து
கற்பனை உலகிற்கு
வந்தோர் போன்று
பிள்ளைகள் பெண்டிர்தம்
பெற்ருேரோடு
பிறந்தகம் துறந்திந்த
ஈழம் வந்தார்.

மலையகத்து வாழ்வுக்கு
நிகரே இல்லை
மாசிக்கும் தேங்காய்க்கும்
பஞ்ச மில்லை
இலைக்கொழுந்து எடுக்கின்ற
வேலை செய்து
எழில் கொஞ்சும் இந்நாட்டில்
இன்பம் காண

கலைகொஞ்சும் தமிழ்நாட்டை
கை நெகிழ்ந்து
கற்பனைக்கு மாறான
கண்ணீர் காண
அலைபொங்கும் கடல் தாண்டி
அன்று வந்த
அபலைகளின் கதைசொல்ல
ஆவலுற்றேன்.

வாழ்வுக்கு ஆசித்து
வந்த மக்கள்
வருகின்ற வழியினிலே
அறிந்து கொண்டார்
தாழ்வுக்கு இலக்காகி
தாங்கள் போகும்
தரம் கெட்ட நிலையதனை
புரிந்து கொண்டார்
பாழ்பட்ட வாழ்வுக்கு
பலியாய் ஆகி
பணத்தோட்ட மலைகளிலே
பசளையானார்
ஆள்விற்றுப் பிழைப்போர்க்கு
அடிமையாகி
அடுத்து வரும் பரம்பரைக்கும்
விலங்கு செய்தார்.

அக்கரையில் ஆசைமொழி
சொன்ன பேர்கள்
அந்தரங்கம் அறியாத
இந்த மக்கள்
இக்கரையில் அடிவைக்கும்
முன்னர் தாமே
இவர் எண்ணம் நடைமுறைகள்
இரக்க மின்மை

அக்கறையில் லாக் குணமும்
ஆணவமும்
அடக்கு முறை அதிகாரம்
யாவும் கண்டு
'சிக்கலிலே மாட்டினமே'
என்று நொந்தார்
சிதைந்தது அவர் கண்ட
கனவு வாழ்வு.

## வரவு

உள்ளமதில் உழைப்பாசை
உந்தித்தள்ள
வள்ளமதில் அடைந்தேறி
வந்தார் மக்கள்
வெள்ளமதின் வேகத்தில்
வள்ளம் மூழ்கி
அள்ளுண்டு ஆழியிலும்
அமிழ்ந்தார் வந்தோர்.

மண்டபம்தட் டாப்பாறை
மக்களோடு
தொண்டியில் இருந்தோரும்
தோணி ஏறி
கண்டியில் பொருள்தேட
கடலைத் தண்டி
தொண்டமா னுறுமன்னார்
துறைகள் சேர்ந்தார்.

வடக்கினையே சேர்ந்தார்கள்
வந்த பின்னர்
''நடக்க'' வெனப் பணித்தார்கள்
நடத்தி வந்தோர்
கடக்கவுள தொலைவு 'மைல்'
கண்டிக்கந்த
இடத்திலிருந்து இரு நூறும்
இன்னும் மேலாம்.

கரையிருந்து மலைநாடாம்
கண்டி செல்ல
முறையான வழியில்லை
முழுதும் காடு
நிரையான அடர்காட்டில்
நீண்டு கண்டி
வரையாகக் காடழித்து
வழி சமைத்தார்.

"அறியாமல் வந்தோமே
ஐயோ இங்கு
முறிகின்றோம்" என்றுள்ளே
முணு முணுத்தார்
பிறிதொன்றும் செய்தற்கு
பாதை யின்றி
நெறிகொண்டோர் பின்னாலே
நடந்து சென்றார்.

காட்டு வழியினிலே
களைப்பு உற்றார்
வாட்டு பசியதனால்
வலிமை கெட்டார்
கேட்டு சகிக்கவொணா
கேடு வழி
நீட்டும் அனுபவித்து
நொந்து சென்றார்.

கொட்டும் நுளம்புகளால்
குருதி கெட்டு
மட்டில் லார் மாண்டார்
மலேரியவால்
பட்டினிச் சாவு வெகு
பயங்கரமே
பட்டிமாடுகள் போல்
பலியே ஆனுர்.

கொள்ளேநோய் பலரை
கொன்றழிக்க
கொள்ளிவிஷக் காய்ச்சல்
குலமழிக்க
பிள்ளே தாயோடு
புருஷர் எல்லாம்
செல்லும் வழி எல்லாம்
செத்து விழ்ந்தார்.

அடக்க முடியாத
அயர்வடைந்து
நடக்க முடியாத
நிலேயடைந்து
கிடக்க முனேந்தோரை
கிடக்க விட்டு
திடக்கல் மனத்தோராய்
திசை தொடர்ந்தார்.

பெற்றார் தரையினிலே
பிணமாய் வீழ
மற்றார் கதறியழ
மனமிரங்கார்
''விற்றார் நீர் உம்மை
விலை கொடுத்து
பெற்றார் நாம், நடவும்
பிறகே'' என்றார்.

செத்தழிய வீழ்ந்தோரின்
பக்கம் தன்னில்
சிரட்டையுடன் நீர்வைத்து
செல்லுவார்கள்
கத்தியழும் அவனுடைய
கண்ணீர் தானே
கடைசிவரை அவனுடைய
காதில் சிந்தும்
சுற்றிவர ஓநாய்கள்
நரிகள் சூழும்
சுதந்திரமாய் அவனுடலை
மேயும் மெல்லும்
குற்றுயிராய் கிடந்து அவன்
துடிக்கும் போதே
குடர் உருவி, உடல்குதறி
குருதியாடும்.

இப்படியாய் இறந்தழிந்து
போனோர் எச்சம்
இரத்த உடை, எழும்பு, தசை
மண்டை ஓடு
அப்பாதை வழியாக
அடுத்து ஏகும்
அடிமைவியா பாரிகட்கு
பாதை காட்டும்

அப்பாவித் தமிழர் அது
காட்சி கண்டு
அச்சத்தில் உயிர் போகும்
அரை வழியில்
அப்போது நடந்ததிவை
அனைத்தும் உண்மை
ஆச்சிகதை பாட்டிகதை
புழுகு அல்ல.

## வாழ்வு

தேட்டினைத் தேடிக்கொண்டு
தென்னகம் மீளவந்தோர்
பூட்டிய புலிக்குகையுள்
புகுந்தவர் போல் தேயிலை
காட்டினில் சிக்குண்டார்கள்
கடைந்தேற வழியும் காணார்
ஆட்டியபடியே எல்லாம்
ஆடிடும் குரங்கு ஆனார்.

பத்தடி அகலம், நீளம்
பன்னிரு அடியாம் அந்த
சுத்தமாய் ஒளியே இல்லா
சூழ் இருட் 'காம்பரா' க்கள்
மொத்தமாய் குடும்பம் ஒன்றாய்
முடங்கிடும் எலியின் பொந்து
இத்தகை 'லயத்'தில் அன்றோ
இவர்களை வாழ விட்டார்.

மலசலகூடம் இல்லை
மருந்துகள் வசதியில்லை
குல, நல நாட்டம் இல்லை
கொள்கைகள் ஏதும் இல்லை
கலை கலாச்சாரம் இல்லை
கல்வியே துளியும் இல்லை
மலையக வாழ்வில் இந்த
மக்களோ மாக்களானார்.

''சுத்தமாய் வாழு'' என்று
சொல்லுவார் யாருமில்லை
சுத்தமாய் வாழுதற்கு
சுதந்திரம் தானுமில்லை
சத்துள்ள உணவுமில்லை
சமைத்திட வரவுமில்லை
செத்தனர் நோயால் தேயிலை
செடியதன் உரமுமானார்.

விடியுமுன் பெரட்டுத் தப்பு
விடுத்திடும் அழைப்புக் கேட்டு
மடியினிற் குழந்தை தன்னை
மறந்து தாய் துரிதப்பட்டு
நொடியினுள் ரொட்டி சுட்டு
நோவெல்லாம் மறந்து அட்டை
கடியினுள் உழைப்புத் தேடி
கடிது செல்வார்கள் காலை.

அடி அடியாக ஏறி
அதட்டுகங் காணிக் கஞ்சி
பிடி பிடியாக ஆய்ந்து
பிரம்புக்கூ டைநிறைத்து
மடி மடி என்று மாய்ந்து
மாலையில் லயத்தை சேரும்
குடியடி மைகளாக
குன்றினார் குன்றில் மக்கள்.

# மலையகப் பெண்கள்

முக்கிலே மின்னும் மின்னி
முறுவல்கள் மின்னும் வாய்கள்
பாக்குவெற் றிலைகள் போட்டு
பழுப்புடன் தோன்றும் பற்கள்
சாக்கினை இடையில் சுற்றி
சாத்திய கூடை முதுகில்
தூக்கியே பெண்கள் செல்ல
தூங்குமோ கவிஞர் நெஞ்சம்.

அஞ்சுகப் பெண்கள் குன்றில்
ஆய்ந்திலை செல்லும் போது
பஞ்செனப் படர்ந்தே வந்து
பாவையர் தம்மை தீண்டும்
மஞ்சுகள் இடையே தோட்ட
மாதர்கள் தோன்றும் காட்சி
நெஞ்சுகள் தம்மை அள்ளும்
நித்தமும் நோக்கச் சொல்லும்.

இலைச்சுமை பின்னே சாய்ந்து
இழுத்திடும் கூடையோடு
தலைச்சுமை கூடைக் கயிற்றால்
தாங்கியே முன்னே உந்தி
மலைச்சுமை மனதில் தாங்கி
மாதர்கள் செல்லும் காட்சி
கலைச்சுவை யோடு நோக்கில்
கவிதைகள் பிறக்கும் நூறு.

தன்னினத்தை தான்விற்று
தான் வாழ்ந்த சித்தன் — குலப்
பெண்ணினத்தை விலேபேசும்
பேராசைப் பித்தன்.

பெரியகங் காணிஎனும்
பெயர் கொண்ட எத்தன் — குள்ள
நரியதனின் குணமுடைய
நஞ்சுஉன் மத்தன்.

கொழுந்து நிறுக்கையிலே
கள்ள நிறை சொல்வான் — யாரும்
எழுந்துவி ஞ தொடுக்கில்.
எமனுகிக் கொல்வான்.

கங்காணி இவனுக்கு
கடையொன்று இருக்கும் — இவர்
அங்கேதான் பொருள் கொள்வார்
அதில் சுரண்டல் இருக்கும்.

ஒன்றின் விலேபத்தாக
உயர்த்தி விலே போட்டு — சம்பள
அன்றில் அது பிடிப்பதனுல்
அடுக்கிடுவான் நோட்டு.

கணக் கெதுவும் தெரியாது
கங்காணி சொன்னால் — அதில்
பிணக்கெதுவும் செய்யாது
போவார்கள் பின்னால்.

தோட்டமதில் ஓய்வின்றி
தொழிலாலிழைப்பர் —இவன்
வீட்டு வேலை செய்வதிலும்
வீணாய் களைப்பர்.

வெள்ளையனின் தோட்டத்தில்
வேலைக்கு வந்தார் — இக்
கொள்ளையனின் கொடுமையிலே
குன்றியுளம் நொந்தார்.

அக்கிரமம் கண்டுமிவர்
அடுத்தவினா போடார் — மேலும்
உக்கிரமமான கொடும்
உபாதைகளை தேடார்.

அவன் செய்த அக்கிரமம்
அடங்கிடுமோ ஏட்டில் · யா
இவண் சிலதை இயம்பிடுவேன்
இனித் தொடரும் பாட்டில்.

## ஐயோ தமிழிச்சியே !

அடுத்துஎழுத
எண்ணும் வேளை
அச்சம் எழுந்து
அலைத்து நெஞ்சை
தடுத்து நிறுத்த
தவிப்பே கொண்டேன்
தவருய் இருப்பின்
தயவாய் பொறுப்பீர்.

உண்மையில்லா
உபகதை சொல்லி
உளற வென்று
வந்தேனல்ல
அண்மைக்கால
இடி அமீன் ஆட்சி
அது போலன்ரே
அன்றும் காண்போம்.

எல்லா இடத்தும்
இல்லை எனினும்
எத்தனையோ பல
இடங்களிலே இப்
பொல்லா பெரிய
கங்காணியனே
புன்மைத் தனத்தின்
உண்மை உருவாம்.

ஆசை காட்டி
அழைத்து வந்தான்
அவனை நம்பி
அன்னை நாட்டை
தூசாய் எண்ணி
துறந்து வந்தவர்
துன்பம் அடைய
தொல்லை தந்தான்.

ஒழுக்கம் அதனை
உயிராய் கொண்டு
உலகில் பெருமை
உடைய தமிழர்
வழுக்கி விழவே
வழியாய் ஆனான்
வஞ்சன் பெரிய
கங்காணியிவன்.

பறங்கித் துரையின்
பக்கம் சேர்ந்து
பந்தம் பிடிக்கும்
பதர்தன் நிலையில்
இறங்கிச் செய்த
கொடுமை எல்லாம்
இயம்பில் வார்த்தை
இடறும் நாவில்.

இலங்கை நாட்டின்
இலாபம் எல்லாம்
எடுத்து ஏகி
தனது நாட்டை
துலங்க வைக்க
வந்த பறங்கியர்
வாழ்கை துணையை
விடுத்தே வந்தார்.

தோட்டப் புறத்தில்
துள்ளித் திரியும்
தோகை யன்ன
தமிழிச்சியரில்
நாட்டம் கொண்டு
நாக்கால் ஊற்றும்
நாய்க்கு நிகராய்
நடத்தலுற்றார்.

வெள்ளைத் துரைக்கு
வேண்டிய பெண்ணை
வெருட்டி மிரட்டி
விருப்ப முட்டியும்
கள்ளப் பெண்டாய்
கற்பை விற்கவும்
காசுக்காயிக்
கயவன் செய்தான்.

ஆட்டியபடியே
அவர்களை ஆட்டி
அடுத்தவன் மனைவி
ஆயினும்தன் வைப்
பாட்டியாய் வைத்து
பாதகம் செய்து
பண்பாடெல்லாம்
பாடையில் வைத்தான்.

கட்டிய கணவன்
கங்காணியவன்
கட்டளைக் கஞ்சி
கங்காணியொடு
கட்டில் அறையில்
மனைவியை விட்டு
காவல் நின்றதும்
கற்பனையல்ல.

தன்னைச் சேர்ந்த
தோட்டம் ஒன்றில்
தையல் ஒருத்தி
பூப்பு அடைந்தால்
கன்னியவளைக்
கன்னி கழிக்கும்
கடமை முதல் இக்
கயவனே செய்தான்.

பெரியவள் ஆனுள்
பிள்ளை என்ருல்
பெற்றவர் உரிய
கடமைகள் முடிய
பெரியகங் காணி
வீட்டுக் கனுப்பவும்
பெண்ணைக் கெடுப்பதும்
சில இடவழக்கு.

இத்தனை கொடுமையும்
ஏற்கத் தவறின்
எதிர்த்துப் பேச
எவரும் துணிகில்
சித்திர வதைக்கே
உரியவராவர்
சிலபேர் எதிர்த்து
சிறையும் பட்டார்.

நிர்வாகத்தின்
நினைவுக் கெதிராய்
நிமிர்ந்து எவனும்
கேள்வி கேட்டால்
சர்வதி கார
சக்திகள் எதிராய்
சதியே செய்து
சிறையுள் தள்ளும்.

போகம் பரைக்குப்
போனவனுடைய
பெண்டும் பெரிய
பெண்மகவெல்லாம்
போகப் பொருளாம்
தோட்டத் துரைக்கும்
பதவியிலுள்ள
பாவியர் யார்க்கும்.

ஆவிக்கஞ்சி
ஆக்கினைக் கஞ்சி
அதனால் அன்றோ
அன்றைய மக்கள்
பாவிப் பயல்கள்
இச்சைக்கெல்லாம்
பலியாய்ப் போனார்
பழிக்காளானார்.

பிறந்த மண்ணை
துறந்து வந்து
பிறர்க்கு நன்மை
தந்த மக்கள்
இறந்த கால
வாழ்வை எண்ணில்
இரத்தச் சுவடு
எத்தனை தோன்றும்,

# கல்வி

அலைகடல் தந்திடும் முத்து — கல்வி
அலைகடல் முத்திலும்
அதி உயர் சொத்து
கலை கலாச்சாரத்தின் வித்து — அதை
கற்றிடும் உரிமையை
கொடுத்திடார் ஒத்து.

கற்றவர் கேட்டிடும் கேள்வி! — அவன்
கள்ள மனத்தோர்க்கு
கட்டாயம் வேள்வி
பெற்றிடும் இன்பங்கள் போகும் — பின்
பெருவினை வந்திடும்
புரட்சிகள் ஆகும்.

ஆகவே இவர்கட்கு ஞானம் — வரல்
ஆகாது செய்குவோம்
அறிவுக்கு ஊனம்
போகவே இவர்வாழ்வு கீழாய் — எம்
பொருளோடு வளமோங்கும்
புகழோங்கும் மேலாய்.

திட்டங்கள் இப்படிப் போட்டு — கல்வி
தீய்ந்து கருகிட
வைத்தனர் வேட்டு
மட்ட நிலையினில் தோட்டம் — வாழ்
மக்கள் அழுந்திடல்
அவர்களின் நாட்டம்.

கங்காணி வீட்டிலே திண்ணை — அதில்
கல்வியை ஊட்டினர்
எழுத்தோடு எண்ணை
மங்காத அறிவுக்காய் அல்ல — தேயிலை
மரங்களை பிள்ளைகள்
முறிக்காது செல்ல.

பெயர் மட்டும் எழுதினுல் போதும் — வெறும்
பேருக்கு எண்ஞானம்
அதைவிட யாதும்
உயர்வாகக் கொடுத்திடல தீது — என்று
உலை வைத்தார் கல்விக்கு
உண்மையில் சூது.

படித்திட வந்திட்ட காலை — இங்கு
படிப்பிக்க வந்தவர்
பணித்தனர் வேலை
முடித்திட வைத்தார் தம் ஏவல் — அது
முடிந்ததும் நடப்பது
லயத்துக்கு ஏகல்.

''ஏதுக்கடா நமக்கிந்த பள்ளி? — சென்று
எடுத்துவா மலையிலே
எரித்திடக் கொள்ளி
இதுக்கெல்லாம் நமக்கென்ன தேவை? — யாரும்
எஜமானன் வீட்டுக்கு
ஏகிச்செய் சேவை''

"கொழுந்துக்கு போயுள்ளாள் அன்னை — அடி
கொண்டு வாச் சொன்னாள்
உணவினை உன்னை
விழுந்து படித்தென்ன நன்மை — அடி
விரைந்துடன் செல்லடி
பிந்தினால் தின்மை"

இப்படி ஆயிரம் சொல்லி — அந்த
இளசுகள் அறிவுக்கு
இட்டனர் கொள்ளி
இப்படி கல்வியை தள்ளி — வைத்த
இயந்திர வாழ்வினில்
உதிக்குமோ வெள்ளி?

பதின்மூன்று வயதுக்கு மேலாய் — பெயரை
பதிந்து அனுப்புவர்
வேலைக்கு ஆளாய்
கதியின்றி கீழானதையோ — அன்று
கல்வியை இப்படிக்
கழித்ததால் மெய்யே.

யாருக்கும், அக்கறையில்லை — கல்வி
'யார்' என்ன விலை என்பான்
மலையகப் பிள்ளை
பேருக்கு மனிதராய் தோற்றம் — அந்த
பிறப்பட்ட வாழ்விலே
பிறக்குமோ மாற்றம்.

# நாடற்றோர்

நாடுவிட்டு நாடுவந்து
நமது நாட்டில் — தாம்
பாடுபட்டு வளமாக்கி
நன்மை செய்தும் — இங்கு
கேடுகெட்டு வாழ்வோர்கள்
நன்றிகெட்டு — இவரை
நாடுவிட்டு போக்கிடவும்
நாட்டமுற்றார்.

நடந்ததுவாம் தேர்தல்முதல்
இந்த நாட்டில் — அதில்
இடந்தந்தார் இவர்களுக்கும்
வாக்குப்போட — தம்
திடந்தந்த எழுவர்தமை
தெரிவு செய்தார் — பிறர்
விடந்தந்த தாக்கமென
விழிப்படைந்தார்.

''மக்குகளே இவர்என்று
மனத்திலச்சம் — நாம்
எக்கணமும் இல்லாது
இருந்து அன்றோ — இந்த
மக்களது சக்தியினை
இன்று கண்டோம் — இது
மிக்கவுமே ஆபத்து
மிஞ்சி விட்டால்.''

''எறும்பூரக்கல் குழியும்
என்பதுண்மை — நாம்
துரும்பாக எண்ணியவர்
தூண்களானூர் — வெறும்
குறும்பாக இனிவாழில்
குலமே நாசம் — நமை
கரும்பாக பிழிந்திடுவர்
கதிபின் என்ன ?

'' உலகெல்லாம் இவர்தாமே
உலவுகின்ருர் — இந்த
நிலமொன்றே நாம் வாழ
நிற்கும் பூமி — இவர்
குலமோங்கி தழைத்திட்டால்
குடியழிந்தோம் — கிளி
இலவத்தில் கனிகாத்த
கதையதாவோம். ''

'' ஒட்டகத்துக் கிடந்தந்த
உவமை போல — எம்
பொட்டொத்த தீவகத்தை
இழப்பதாமோ — இனி
விட்டுவைத்தால் இப்படியே
விழ்வதுண்மை — விழி !
திட்டமிடு இவர்தம்மை
தீர்க்க வேண்டும். ''

"ஆக்கவும் அழிக்கவும்
ஆளுவோரை — முடி
நீக்கவும நிறுத்தவும்
வலிமைபெற்றுர் — எமை
காக்கவும் எமக்கினி
சக்தியேது — இவரை
போக்கவே உடன்செயல்
புரிகுவோமே."

அறிவெனும் குதிரையை
தட்டிவிட்டு — கடும்
குறியது வைத்தனர்
இவரை வீழ்த்த — நல்
நெறியெனக் கொண்டனர்
இந்த நாட்டில் — இவர்
சிறிதள வுரிமையும்
அற்ருேராக்க.

வாக்கது அளிக்கவும்
உரிமையில்லா — செல்
வாக்கது இழந்திவர்
முடவரானுர் — பேச
நாக்கது இழந்தவர்
போலுமானுர் — வாழ
போக்கிடம் அற்றவர்
நிலையிலானுர்.

அடுத்திங்கு நடந்திட்ட
தேர்தல் தன்னில் — வாக்கு
கொடுத்திடும் உரிமையிலே,
ஆட்சிமன்றில் — குரல்
கொடுத்திட, இவர்க்கென
யாருமில்லா — நிலே
கெடுத்தனர் நிதமுமே
உரிமை போக்கி.

உழைப்பதும் கொடுப்பதும்
உரிய தொண்டாய் — தாம்
தழைப்பது கண்டிடா
தகைமையற்று — உயிர்
பிழைப்பது போதுமே
என்றமட்டில் — இவர்
இழைப்பது அனைத்தையும்
ஏற்கலானுர்.

குட்டிடக் குட்டிட
குனிவோரானுர் — பிறர்
எட்டியே உதைத்திடும்
ஏணியானுர் — பிறர்
பெட்டியை நிறைத்திட
வியர்வை சிந்தி — ஏழ
கட்டிடம் எழும்பிட
கற்களானுர்.

# விழிப்பு

காலம் கடந்தது காலம் கடந்தது
கண்கள் சொரிந்திட காலம் கடந்தது'
ஞாலம் வளர்ந்தது ஞாலம் வளர்ந்தது
ஞானம் பிறந்திட ஞாலம் வளர்ந்தது

புத்தி பிறந்தது புத்தி பிறந்தது
புன்மை உணர்ந்திட புத்தி பிறந்தது.
குத்தி நிமிர்ந்தனர் குத்தி நிமிர்ந்தனர்
குள்ளர் கலங்கிட குத்தி நிமிர்ந்தனர்.

''எத்தனை காலங்கள் எத்தனை காலங்கள்
எங்கள் விலங்குகள் எத்தனை காலங்கள்
பித்தனைப் போலநாம் பித்தனைப் போலநாம்
பிச்சை எடுப்பதோ பித்தனை போலநாம்''

'' அஞ்சிப் பணிவதோ அஞ்சிப் பணிவதோ
— ஆண்மையில்லாது யாம் அஞ்சிப்பணிவதோ
துஞ்சத்துணியடா துஞ்சத்துணியடா
துன்பம் துடைத்திட துஞ்சத்துணியடா.''

''கொள்ளையடிக்கிறார் கொள்ளையடிக்கிறார்
கொள்ளையடிப்பவர் கொள்ளையடிக்கிறார்
முள்ளெடுப்பமே முள்ளெடுப்பமே
முள்ளது கொண்டுயாம் முள்ளை எடுப்பமே'

'' பட்ட துயரங்கள் பட்ட துயரங்கள்
பட்டு அழிந்தன பட்ட துயரங்கள்
மொட்டு மலர்ந்தது மொட்டு மலர்ந்தது
முட்கள் முறிந்திட மொட்டு மலர்ந்தது.''

என்று துணிந்தனர் என்று துணிந்தனர்
''இன்னல் துடைப்பமே'' என்று துணிந்தனர்
நன்று வளர்ந்தன நன்று வளர்ந்தன
நம்பிக்கை வித்துகள் நன்று வளர்ந்தன.

''ஆண்டுகள் பலதாய் அடிமை நிலையில்
அடியுதை பட்டவர் அழுது வாழ்ந்தவர்
பூண்டுள நிலையை போக்கிட எண்ணி
போரிடத் துணிந்து புரிந்தனர் செயல்கள்
''ஆண்டிகள் அல்ல அபலைகள் அல்ல
அன்னை தமிழின் அருந்தவப் புதல்வர்
வேண்டிய கருமம் வென்றிட வேண்டில்
வெல்லம் என்று விரும்பிடோம் உயிரை
மாண்டிடத் துணிந்து மண்ணில் வீழ்வம்
மானம் காத்து மடிவதில் பெருமை
தோண்டி இவ்வுடலும் துச்சம் எமக்கு
துன்பம் தாங்கிடல் இன்பம் எமக்கு
காண்டிடும் எங்கள் கரத்தின் வலிமை
களத்தில் பாய்ந்து கவலை களைவம்
ஆண்டிடும் உங்கள் ஆணவம் அழிக்கும்
அரிகள் நாங்கள் அறிவீர் நீங்கள்
பாண்டியர் சேரர் சோழர் என்ற
பரம்பரைவழியில் பிறந்தவர் நாங்கள்
சீண்டிட வேண்டில் சீண்டிப் பாடும்
சிதைவீர் உங்கள் சீவியம் முடியும்
கூண்டில் எமமை குற்றுயிர் ஆக்கும்
குண்டுக் கிரையாய் கொன்று ஒழியும்
தாண்டியே வருவோம் தாங்கியே துயர்கள்
தலையோ குனியோம் தயங்கிப் பணியோம்''
என்று துணிந்தவர் எரிதழலாகி
எத்தனை போர்கள் எடுத்து நடத்தினர்!
கொன்று குவித்தனர் குற்றுயிராக்கினர்
குருதிசிந்தி கொடிகள் நாட்டினர்

"தின்று திரியும் தெருநாய் அல்ல
தீரம் கொண்ட திராவிடர்" என்று
சென்று ஆடினர் செருக்களம் யாவும்
செருக்கு உடையவர் செயலைமறந்து
நின்று கலங்கிடும் நிலையை ஆக்கினர்
நித்தம் அஞ்ச யுத்தம் புரிந்தனர்
அன்று நடாத்திய அஞ்சா போரை
அடக்க நினைத்தவர் அழிக்க வதைத்தும்
நன்று திட்டம் நாடி நடாத்தினர்
நரபலிதந்தும் நன்மைக் குழைத்தனர்
குன்றில் வாழ்ந்த குருளைகள் தந்தலை
குனியார், நீதி கோரி வழங்கிடு
மன்றில் ஏறிமாதம் பலதாய்
வாதம் புரிந்த வரலாறுண்டு.

முல்லோயா தோட்டம் முதலில் தியாகி
கோவிந்தன் உயிரை கொண்டது பலியாய்
கந்தளா தோட்டம் களப்பலி கொண்டது
வீரன் வேலாயுதம் வீராசாமியை
சாமிமலையில் சாய்ந்து வீழ்ந்தான்
வெள்ளையன் என்பான் வேங்கை அன்னான்
ஆள்கொல்லை தோட்டம் ஆவிபறித்தது
ஆதிஅப்பன் அஞ்சா நெஞ்சனை
லேங்ஸ்டேன்ட் தோட்டம் வாங்கிக் குடித்தது
வேதன் என்னும் வெற்றி வீரனை
பணியபத்தனை தலவாக் கெலயில்
வைத்தியலிங்கம் வைத்தான் உயிரை
பொகவந்தலாவையில் போக்கினர் உயிரை
ஐயாவு என்னும் அரிமகனோடு
பிரான்சீஸ்,கொம் மாண்டி, பொன்னையா
கந்து நகர தோட்டம் மாத்தளை
கவர்ந்தது அழகன், ரெங்கசாமியை
மல்வானை தோட்டம் மடியசெய்தது
சிதம்பரம் தனையே சிந்தியே இரத்தம்
மூக்கலா சேனை முடித்தது வீரன்
தங்கவேலுவின் தயங்கா வாழ்வை
செல்லையா, ஆராயி, நடேசன் கதையும்
செத்தது லட்சுமித் தோட்டம் அதனில்
மாரியப்பன் மடிந்தனன் வீணாய்
மடுல்கல கொண்ட கோனகிலா போக்கில்
பொம்மாண்டி பொன்னையா போனான் வீணாய்
மாகிறேட் தோட்ட மண்ணதின் மீது
சீனுகெலயில் சீவன் இழந்தவர்

இராமையா, அழகர்சாமி என்பார்
நாலந்த தோட்டம் நரபலிகொண்டது
நால்வரை ஒன்ருய் நாமங்கள் கூறில்
ஆறுமுகம், கந்தையா, அவர்களோடு
பாவையள் பார்வதி, ராமசாமியை
பத்தனை டெவனில் பலியாய் போனன்
சிவனுலெட்சுமணன் சொரிந்தே சோரி
பள்ளேகலயில் பழனி வேலும்
மடக்கும் பறயில் மாயவனேடு
அக்கரபத்தனை இராமு ஜெயமணி
ஆவிகொடுத்தது அனைத்தும் உண்மை
எந்தன் எழுத்தில் அடங்கின போக
எத்தனை உயிர்கள் இன்னுமோ அறியேன்
செத்தனர் இவர்கள் செருக்களமாடியும்
செருக்கர் திமிரர் செயல்களாலும்
அத்தனையும் இவை அழியாசத்தியம
ஐயகோ ஆண்டவா அடுக்குமோ உனக்கு?

# தொழிற்சங்கங்கள்

அல்லல்களை எடுத்துச் சொல்லவும் துயர் வெல்லவும்
வல்ல தொழிற்சங்கம் ஆக்கினர்இடர் போக்கினர்
செல்ல செல்ல சிலகாலமே உறவுப்பாலமே
அல்ல எனும் படிக்காயினர் துண்டாய் போயினர்.

கண்ட கண்ட தொழிற் சங்கமே மலை எங்குமே
கொண்ட மனதுக்கு கூட்டினுர் பகை மூட்டினுர்
அண்டப் புழுகெல்லாம் சொல்லுவார்
சிலவெலலுவார்
தொண்டர் பணம்தனை அள்ளுவாா கொள்கை
தள்ளுவார்.

ஏய்க்கும் வகையினில் தலைமை ஆன நிலைமை
காய்க்கும் மரங்கள் பாட்டாளி கேட்டாளி
நாய்க்கும் இழிவாகிப் போனுர் நன்மை காணுர்
தேய்க்கும் கரங்களில் தேய்ந்தார் ஐயோ மாய்ந்தார்

ஆண்டுக்கும் மாநாடு கூட்டுவார் புள்ளி காட்டுவார்
'பாண்டு' கச்சேரி என்று ஆட்டுவார் களிப்பு
ஊட்டுவார்
வேண்டும் தீர்மானங்கள் கொள்ளுவார் அரங்கில்
துள்ளுவார்
மீண்டும் மற்ற ஆண்டில் சேருவார் ஏதும் கூறு
வார்.

முன்னர் இலட்சியங் கொண்டு நின்ற துண்டு
பின்னர் மறந்தவை சென்று கொள்கை கொன்று
மன்னர் குடி நிலை என்று ஆனுர் இன்று
என்ன நன்மை வரும் இதனுல் பயன் எதனுல்?

ஆட்சி செய்வோரோடு உறவு மனம் கரவு
மாட்சி தரும் பெரும் பதவி வேறு உதவி
காட்சிப் பொருள்களை கொடுத்து உளம் கெடுத்து
மீட்சிக் கிடர் இதால் விதித்தார் நெஞ்சில் குதித்தார்.

# இனக்கலவரம்

காடானதை மேடானதை
நாடாகவே மாற்றி
ஓடானவர் ஓடோடிய
பாடானது நிலையே

அந்தோ இவர் வந்தே வளம்
தந்தே குவித்தாலும்
வந்தோர் சிலர் பந்தாடினர்
சிந்தாகுலம் இதுவே

இலங்கையது இலங்கவளம்
துலங்கவைத் தோர்கள்
கலங்க சில விலங்கர் இவர்
நலங்கள்கெ டுத்தாரே

வெறித்தார் சிலர் பறித்தார் பொருள்
சரித்தார் உடல் தரையில்
உதித்தார் தசை எரித்தார் இவர்
மரித்தார் கணக் கிலவே

உடைத்தார் கடை, எடுத்தார் திறை
படைத்தார் துயர் கதையை
கிடைத்தார்கதை, முடித்தார் உயிர்
குடித்தார் திமிரோடு

பழித்தார், தலை மழித்தார் ஐயோ
கிழித்தார் வயிறதையே
இழுத்தார் குடர், அழித்தார் இதை
எழுத்தாய் வடிப்பதுவோ

மங்கைகுலம் சங்கைகெட
பங்கம் உற மானம்
நங்கையவர் கொங்கையற
அங்கம் குறைந்தாரே

"அட்டாநம் நாட்டா நீ
நட்டாவெளி எனவும்
கொட்டாஅடி சுட்டா" என
இட்ரானது செய்தார்

தலையானவர் சிலையாகினர்
இலையே வழி எனவே
உலைவாயினில் உயிராகியே
உலைந்தார் மனம் தளர்ந்தார்

தெரிவையரை தெருவில் இழுத்
துரிவர் துகில் துணிந்தே
அரிவையரை அரியின்குலம்
அருமை குலைத்ததுவே

கண்ணை நிகர் கற்பை கண
வன்முன் சுவைத்தனரே
அன்னையவள் முன்னே மகள்
தன்னை கெடுத்தனரே

பிடித்தார் சிலர் அடித்தார் பலர்
துடித்தார் உயிர் கொல்ல
கடித்தார் அவர், வடித்தார் இவர்
குடித்தார் நரர் குருதி

நாயைநிகர் பேயைநிகர்
தீயைநிகர் தீயோர்
தாயை சிறுசேயை ஒரு
காயை பிளந்தாற் போல்

கத்திக்கிரை குத்திக் கொடுத்
தெக்திக் குதித்தாட
கத்திக்குரல் செத்து தமிழ்
ரெத்தம் வழிந்தோட

கொலையானதை கலையாகவே
புலையோர் புரிந்தனரே
அலையானதில் கலமானது
மலை நாடதில் வாழ்வே

குறிஞ்சி இது நெருஞ்சி உயிர்
உறிஞ்சும் மண் எனவே
அறிந்தும் இதில வாழ்வோ உடன்
பிர்ந்தேகுவம்'' என்றும்

''இனத்தார் நம் சனத்தார் நல்
மனத்தார் நம் தமிழர்''
எனத்தான் அவர் நினைத்தார் உடன்
அணைத்தார் வட. கிழக்கார்.

## அபயம் கொடுத்தோர்.

தஞ்சம் என்று வந்தவர்க்கு
தம்கரத்தை நீட்டியவர்
கொஞ்சமல்ல பட்டதுயர்
கோடிவகை என்றிடலாம்

நன்மை செய்தல் கூட இந்த
நாட்டினிலே குற்றமப்பா
புன்மை நிறை ஆக்கினைகள்
புண்ணியர்கள்? செய்தனரே.

கைவிலங்கு இட்டவரை
காவலிலே வைத்து வதை
மெய் வருந்த செய்தனரே
மிக்கதுயர் தந்தனரே

பயங்கர வாதியென்றும்
பணக் கொள்ளை காரரென்றும்
பயங்கரம் கொண்டதனால்
பழிகளைச் சூட்டினரே

புலிப்படை - கள்ளரென்றும்
புரட்சியின் கூட்டமென்றும்
கிலிப்படையாகியிவர்
கீழ்மைகள் செய்தனரே

தம்மையழித்தேஇவர்க்கு
தஞ்சமளித்தோர் மனது
வெம்மைபட வேசிலபேர்
வேறுவிதம் பேசினரே

இன்னல்களில் கைகொடுக்க
இயலாதோர் தூரநின்று
சொன்ன மொழி கள்கேட்கின்
சொல்வொணா வேதனைகள்!

'எல்லைகளில் எம்மவரை
ஏய்த்திருத்தும் நோக்கம் இது
தொல்லைகளில் மாட்டிவிட்டு
தூரநிற்கும் திட்டமிது

கூலிகளாய் வாழ்ந்த எம்மை
கூட்டிவந்து தம்முடைய
வேலிகளின் காவல்களாய்
வேண்டுமென்று வைத்துள்ளார்

'நாட்டமெல்லாம் நம்முடைய
நன்மையிலே கொண்டு அல்ல
தோட்டக்காட்டு மக்கள் ஏய்க்க
தோது என்ற காரணத்தால்

சாதிபேதம் நூறு உள்ள
சண்டாளநாடு இதில்
தீ திருக்கும் பின்னுமக்கு
திரும்பிவிடும் என்று சொன்னார்

அன்பு செய்த கைகளிலே
ஆணிவைத்து தைத்தது போல்
துன்புறுத்தி னார்துயர்கள்
துடைத்திடவே வந்தவரை,

'என்ன தானும் சொல்லட்டும்
எப்படியும் தூற்றட்டும்
அன்னவர்க்கு நாம் உதவி
ஆற்றிடுதல் கொள்கை என்று

பன்னரிய தொல்லைகள்
'பனாகொடை வெலிக்கடை
என்ன துயர் ஆனாலும்
ஏற்றிடவும் சித்தமானார்

வீடளிக்க வந்தவர்கள்
வீடு இன்றி அலையலானார்
நாடளிக்க வந்தவர்கள்
நாடு இன்றி அலையலானார்

ஊணளிக்க வந்தவர்கள்
உணவு இன்றி வாடலானார்
காணவொணாக் காடுகளில்
கண்ணீரோடு வாழுகின்றார்,

நீதியின் மேல் காதலுற்றோர்
நிட்சயமாய் பேறுபெற்றோர்
வேதியன் கிறிஸ்து மொழி
வீணாகிப் போய் விடாது

சோதி எழும் காலம் வரும்
சூழ்ந்த இருள் தானகலும்
பீதியற்று எம்மவர்கள்
பேரொலிக் காணுவமே.

# வடக்கு கிழக்கு

நொந்துடைந்து நின்றவர்கள்
வந்தடைந்தார் வடகிழக்கு
வந்தவரை வரவழைத்து
சொந்தமென அரவணைத்து

சொந்தமாக நிலமளித்து
குந்த வீடுவாசல் தந்து
இந்த நாட்டு மக்களுக்காய்
எந்த நாளும் வாழுமென்றார்.

காணிதந்து காசுதந்து
தானிய விதைகள் தந்து
கோணிடாத அன்பு தந்து
பேணியே பராமரித்தார்

பரந்தமன வடகிழக்கை
தரம் குறைத்து எண்ணினரோ
கரம் கொடுத்து நின்ற போதும்
வரம் வெறுத்து போதல் போல

பரம்பரையோர் வாழ் தேயிலை
மரம் அடர்ந்த மலையதற்கு
உரம் படைத்தவர் சிலபேர்
சிரம் குனிந்து திரும்பினரே.

மறுறையோர்கள் தமிழர் நாட்டில்
நெற்பயிர்கள் தோட்டமிட்டு
மற்றையோர்க்கு ஈடு என்று
சுற்றமோடு வாழலுற்றார்.

ஆண்டியாகிப் போன கும்பல்
வேண்டியவை பெற்றதாலே
மீண்டுமிவர் மேலெழுகில்
தீண்டிடுவார் நாகமாகி.

விட்டுவைத்தால் கேடுதானே
வெட்டுவீத்தல் வேணுமென்று
கெட்டு விட்ட தோர் மரத்தை
பட்டு விடச் செய்தல் போல

வீடெரித்து கேடளித்து
தேடழிதது வெறுமையாக
கூடிழந்த குருவி போல
ஓடவிட்டார் கூட்டமாக.

பட்டகாலில் பட்டதுவே
கெட்டகுடி கெட்டதுவே
திட்டமிட்ட தீங்குகளால்
நட்டமுற்று ஏங்கினரே.

ஆளுவோர்கள், வாளை ஏந்தி
வாழுவோரை வாழ்த்தும் போது
பாழும் இந்த நாட்டில் நீதீ
வாழும் என்று எண்ணலாமோ

# பிரியாவிடை

சாற்றினை எடுத்த பின்னர்
சக்கையை வீசுதல் போல்
ஏற்றிலே இவர் நிலையும்
இப்படியாய் ஆகியது
ஊற்றியே செவ்விரத்தம்
உரமாகி இந்தநாட்டில்
ஆற்றிடா நிலையினிலே
அன்னை மண் திரும்புகிறார்

குடும்பத்தின் ஒரு பகுதி
குடியிருக்க இந்நாட்டில்
கடும்பாசப் பிணைப்புள்ள
காதலர்கள் உறவினர்கள்
சுடும் நெஞ்சத் துயரோடு
சூழ்ந்து வழியனுப்ப
நெடும் பயணம் போகின்றார்
நீள்கடலுக் கப்பாலே

பெற்றவளை பெற்றவனை
பிள்ளைகளை உற்றவரை
இற்றரையின் குன்றுகளில
இரையாகத் தந்துவிட்டு
மற்றவரை வாழவைத்த
மலையகத் தெய்வங்கள்
இற்றைவரை வாழ்ந்த மண்
இதைவிட்டுப் போகின்றார்

கண்ணீரில் வந்தோர்கள்
கண்ணீரில் நொந்தோர்கள்
கண்ணீரில் வளர்ந்தோர்கள்
கண்ணீரில் வாழ்ந்தோர்கள்
கண்ணீரில் நின்றோர்கள்
கண்ணீரில் நிலைத்தோர்கள்
கண்ணீரில் விடைபெற்று
கண்ணீரில் செல்கின்றார்

அயலவர்கள் அன்பர்கள்
அழுகையொடு முத்தமிட
இயலாது துயரத்தை
இதயத்தே புதைத்துவிட
புயலான ஓலமுடன்
புறப்படுவர் வாழ்ந்திட்ட
உயமான அறைவிட்டு
லங்காவின் மாட்சியிது

புகையிரத மேடையிலே
போய்நின்று பார்க்கையிலே
புகைவண்டி பிரித்திவரை
புறப்பட்டுப் போகையிலே
சிகை பிய்த்து சீறியழும்
சிந்தா குலக்கோலம்
பகைவர்க்கும் கண் சுரக்கும்
பார்த்திருக்க இக்காட்சி

கப்பலிலே இறுதியிலே
கைகாட்டிச் செல்கையிலே
ஒப்பாரி ஓலம் எழும்
ஓங்கு கடல் ஓசையிலும்
உப்பான கடல் நீரில்
உதிர்க்கும்கண் ணீர் கலக்கும்
அப்பாலே போன பின்னும்
அழும் ஓசை காற்றில் வரும்

தலைமன்னார் கரையிருந்து
தான்பிறந்த நாடு விட்டு
அலைபாயும் நெஞ்சோடு
அலைமீது செல்லுமிவர்
நிலைமாறும் என்பதிலும்
நிச்சயமும் கிடையாது
தொலைதூரம் சென்றாலும்
துயரங்கள் ஆறிடுமோ?

இந்தியா இலங்கையெனும்
இருதரப்பு அரசினரும்
முந்தியே செய்துள்ள
முடிவுகள் படிதானே
இந்தியா பிரஜைகளாய்
இசைந்தங்கு வாழுதற்கு
அந்தியப் பயணமதாய்
ஐந்து லட்சம் பேர் போனார்.

# பத்தினித் தமிழர்

குடும்பம் என்றிருந்தால் நூறு
குழப்பங்கள் வந்து போகும்
கடும்பகை துயர் வரினும்
கட்டிய கணவன் வீட்டை
திடும் எனவிட்டு ஏகத்
துணிவளோ உண்மை இல்லாள்
இடும்பைகள் வரினும் அங்கே
இருக்கவே முடிவு கொள்வாள்

வீட்டினை விட்டு ஏகி
வீதியில் நின்று துன்ப
பாட்டினை பாடல் வீணே,
பத்தினிப் பெண் கணவன்
வீட்டினில் வாழ்ந்து கொண்டே
வீரமாய் தன் துணைவன்
தேட்டினில் பங்கு கொள்வாள்
திருத்துவாள் கொழுநன்றன்னை

குலமகள் போலும் ஈழ
குன்றிலே வாழ்ந்த மற்றோர்
கலவரம் நூறு வந்தும்
கலங்கிடா நெஞ்சராக
நலமென்ன தீமை என்ன
நடப்பவை நடந்தபோதும்
''விலகிடோம்'' என்று சொல்லி
வீரமாய் வாழலுற்றார்

"பிறந்தது இந்த மண்ணே
பிள்ளையாய் ஓடி ஆடி
திரிந்தது இந்த மண்ணே
தீடமுடன் முடிவு கொண்டோம்
இறந்திடல் எனினும் இந்த
இலங்கையின் குன்றெமெக்கு
சிறந்தது இதனை விட்டு
சென்றிடோம் என்றிருந்தார்"

காலமே மாறும் போது
கருத்துகள் மாறும் போது
ஞாலமே மாறும் போது
நியாயமே காணும் போது
மூலவேர் நாமே என்னும்
முக்கியம் உணரும் போது
ஈழவர் நாங்களாவோம்
இலங்கையின் மக்களாவோம்

இத்தகை உறுதியோடும்
இனசன பந்துவோடும்
எத்தகை இடர் வரினும்
ஏற்றிடும் துணிவினோடும்
இத்தரை மலையில் வாழ
இசைந்தவரான மக்கள்
உத்தமர் இவரே நாட்டின்
உயிர் நரம்பாகியுள்ளார்

அஞ்சியோர் அகன்றுபோக
அலைகடல் தாண்டி ஏக
எஞ்சியே நின்ற மக்கள்
எதனையும் ஏற்கவென்று
நெஞ்சிலே துணிவு கொண்டு
நிலமதில் பற்று உற்று
துஞ்சினும் இந்த மண்ணில்
துஞ்சுவம் என்று ஆனார்

பொருப்பிலே வாழும் மக்கள்
பொறுப்பினை உணர்ந்த மக்கள்
செருப்பென இனியும் வாழார்
செருக்கொடு இங்கு வாழ்வார்
நெருப்பென இவர்கள் ஆவார்
நீசர்கள் அவரை தீண்டின்
திருப்பமோ நூறு தோன்றும்
தீர்ந்திடும் இவர்கள் இன்னல்

## பாதுகை அல்ல

பத்தினித் தமிழராம்
பதத்தினைத் தந்ததால்
பழமையை தலையினில் வைத்து — கணவன்
உத்தமன் அல்லாத
உலுத்தனாய் இருப்பினும்
உத்தமி துயர் கொளல் போல

கண்ணகி வழியிலே
கண்மூடி வாழ்கின்ற
கருத்தினை இங்கு யான் சொல்லேன் - புதுமை
பெண்ணவள் போலவே
புயலென மாறியே
புரிகுவீர் எதிர் வழக்காடி

பாதுகை ஆகியே
பழவழக்கொழுகீடும்
பாவையின் பாதையில் வேண்டாம் - இவண்
தீது கைஓங்கிடின்
தீமையை சாடியே
தீரமாய் வாழ்ந்திடல் வேண்டுமே.

காதலர் மனத்துடன்
கையது கோத்திடல்
கடமையே ஆயினும வாழ்வில் - கொண்ட
காதலன் தூய்மையில்
காதகன் ஆகிடில்
காதலி தாங்கிடலாமோ?

இருமன உறவுடன்
இயற்றிய இல்லறம்
இனிமுடி யாதெனக் கண்டால் - உடன்
திருமண முறிவுதான்
திருப்தியாம் என்கிடில்
திடமுடன் முடிகொள், வாழு

மலையகம் எம்மவர்
மண்ணது ஆகுமே
மற்றுமோர் தாய் மகவல்லர் - எம்
நிலையகம் இங்கு யாம்
நிற்பது எம் கடன்
நிகழ்ந்துபோர் உரிமைகள் கோரி

மோதலே ஆகினும்
மோதியே சாகினும்
முழங்குக முரசுவிண் அதிர - பிரிந்து
போதலே முடிவெனில்
பொங்கியே அணிதிரள்
போலிகள் பொடி பொடியாக

மலையக மங்கையர்
மாலை இழப்பினும்
மனமது சோர்வது இல்லை - மலையில்
இலை கொய்து வாழ்வினை
இன்னும் தொடருவாள்
இது ஒரு பாடமாய் கொண்டு

ஓடுதல் உயிர்க்கஞ்சி
ஒதுங்குதல் நிழல் கண்டு
உன் பழம் வாழ்வுக்கு மாசு - நின்று
சாடுதல் கொள்கையில்
சாகுதல் முன்வழி
சத்தியம் காத்திங்கு வாழு

தரித்திரம் வாழ்க்கையில்
தரித்திரா நித்தியம்
தனித்துவம் காணுவம் வாழ்வில் - புதிய
சரித்திரம் காணுவம்
சமத்துவம் காணுவம்
சங்கமம் ஆகுவம் மலையில்

பொறுத்தவர் ஆளுவர்
பொறுத்திடு நாள் வரும்
பொன்மயம் ஆகிடும் வாழ்வு - எம்மை
வெறுத்தவர் உணருவர்
வேதனை காணுவர்
விரைவினில் வரும் அந்தநாளே

# ஐக்கியம்

வெல்லுவம் வெல்லுவம்
வேற்றுமை வெல்லுவம்
கொல்லுவம் கொல்லுவம்
குறைகளைக் கொல்லுவம்
சொல்லுவம் சொல்லுவம்
ஒற்றுமை சொல்லுவம்
செல்லுவம் செல்லுவம்
சேர்ந் தொன்று செல்லுவம்

தன்னவன் தோள்களை
தழுவிடல் கீழ்மையோ
தன்பகை தாள்களை
தாங்கிடல் மேன்மையோ
என்னதான் வேற்றுமை
இருப்பினும் எம்மிடை
என்பலம் எம்பலம்
என்றிணை பயன்வரும்

தண்ணீரில் தளம்பியே
தவித்திடும் கலம் என
கண்ணீரில் வாழ்ந்திடும்
கதையினை மாற்றுவம்
மண்ணோரில் சமமுடை
மனிதரென்றாகுவம்
எண்ணீரோ இவையெலாம்
இணையீரோ இனியேனும்

எறும்புகள் ஒற்றுமை
எம்மிடை இல்லையே!
வெறும்பகை பிளவுகள்
வேற்றுமை இவைகளால்
பெறும் பயன் கடலிலே
பெய் மழையாகுதே
தீரம்பட வேண்டுமேல்
திரளுவம் ஓரணி

நாட்டிடை இன்றுள
நால்வகை வேதமும்
போட்டிகள் பிளவுகள்
போலியாம் சாதியும்
ஈட்டிடும் வேற்றுமை
இனி இவண் வேண்டுமோ?
காட்டிடும் ஒற்றுமை
காண்பவர் வியந்திட

உதிரிகள் ஆகியே
ஒற்றுமை சிதைந்து யாம்
எதிரியின் கால்களை
எந்தியே வாழ்வதில்
கதிரிடை களையென
கவலைகள் சூழுமே
கதிரவன் எம்மிடை
காண்பது என்று சொல்?

கதை கண்ணீர் கவிதை
காவியம் பாடினேன்
சிதைவுறும் மக்களின்
செய்திகள் கூறினேன்
உதைபடும், உலைவுறும்
உண்மைகள் கூறினேன்
இதையெலாம் பாடினேன்
ஏனெனக் கூறுவேன்

என்னரும் தோழர்காள்
ஏறுகாள் இந்த மண்
பன்னரும் பயன்பெற
பலியுறும் வீரர்காள்
முன்னரும் எம்நிலை
முள்ளிடை வாழ்நிலை
பின்னரும் எம்நிலை
பின்னுற வாழ்வீரோ?

ஆண்டுகள் இத்தனை
ஆகியும் எம்மவர்
கூண்டினில் வாழ்வதும்
கூலியாய் வாழ்வதும்
மூண்டெழும் தீயிடை
முயலென மாள்வதும்
வேண்டுமோ எம்மிடை
விடையது காணுவீர்

இரும்பென எம்மிடை
இருப்பினும் வலிமைகள்
தரும்பயன் என்னதான்
நயவுடன் நோக்குவீர்
பெரும்பலம் இருப்பினும்
பிளவுகள் நூறெனில்
வரும்பகை வென்றிட
வலிமைகள் போதுமோ?

நடந்தவை யாவுமே
நடந்தவை யாகட்டும்
கடந்தவை யாவுமே
கடந்தவை யாகட்டும்
நடப்பவை யாவுமே
நல்லவை யாகட்டும்
கடந்திட எம் இடர்
கைகளைக் கோருமின்

மோதியே கெட்டனர்
மும்முடி மன்னரும்
மோதியே கெட்டது
முத்தவெம் தமிழ்க்குடி
மோதியே எம்முள்யாம்
முழுமையாய் அழிவதோ?
ஆதியை மாற்றுவோம்
அனைவரும் சேருவோம்

எமது அடுத்த வெளியீடு

''வீடு''

இளையவனின் படைப்புகள்